பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 04 2025 **WENDESDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் சற்றுமுன்னர் மக்களவையில் தொடங்கியது.

2. நாட்டிற்கு முதலிடம் என்ற சிந்தனையோடு, இளைஞர்கள் எழுச்சியுடன் செயல்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தமிழகத்திற்கான நெடுஞ்சாலை திட்டங்களுக்கான பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டு விவரங்களை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

4. ஜம்மு காஷ்மீரில் மூன்று புதிய குற்றவியல் நடைமுறை சட்டங்களை அமல்படுத்துவதற்கான குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது.

5. காஸா பகுதியை தங்களது கட்டுப்பாட்டில் முழுமையாக கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<<>>>>>>**

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் சற்றுமுன்னர் மக்களவையில் தொடங்கியது.

நாடாளுமன்ற கூட்டுக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இம்மசோதா அவையில் தாக்கல் செய்யப்பட்டது.

காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இம்மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தன.

காங்கிரஸ் உறுப்பினர் திரு வேணுகோபால் இந்த மசோதாவில் திருத்தங்கள் செய்வதற்கு நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்றும், நாடாளுமன்றத்திற்கு மட்டுமே திருத்தம் செய்ய அதிகாரம் உள்ளதாக குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, வக்ஃப் மசோதாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இம்மசோதா மீது எட்டு மணிநேரம் மக்களவையில் விவாதம் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நாட்டிற்கு முதலிடம் என்ற சிந்தனையோடு, இளைஞர்கள் எழுச்சியுடன் செயல்பட வேண்டும் என்று மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று, "வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இளம் நாடாளுமன்ற பிரதிநிதிகள்" என்ற கருத்தரங்கில் உரையாற்றிய அவர், நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறினார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இளையோர் நாடாளுமன்ற பிரதிநிதிகள் கருத்தரங்கு, ஆக்கப்பூர்வமான பலன்களை அளிக்கும் எனறு தெரிவித்தார்.

நாடு முழுவதும் 300 மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் மற்றும் இளம் நாடாளுமன்ற பிரதிநிதிகள் இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்துகொள்வதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்திற்கான நெடுஞ்சாலை திட்டங்களுக்கு மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்களை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் சமூக வலைதளத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார்.

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரியின் பதிவை தமது சமூக வலைதளத்தில் திரு எல். முருகன் பதிவிட்டுள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் நெஞ்சாலை 75 மற்றும் 38-ல் நான்குவழித்தடம் அமைப்பதற்கு மத்திய பட்ஜெட்டில் 752 கோடியே 94 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக திரு நிதின் கட்கரி தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நான்குவழி சாலை விரிவாக்கத்தின்போது 50 மீட்டர் அகலத்திற்கு நிலம் கையப்படுத்தப்படும் என்றும், எதிர்காலத்தில் அந்த வழித்தடத்தை ஆறு வழிச்சாலையாக மாற்றுவதற்கு இது உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு சர்வீஸ் சாலைகள் இதில் கொண்டுவரப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நெடுஞ்சாலைப்பகுதியில் நிலத்தடி கழிவுநீர் செல்வதற்கான கட்டமைப்பை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு நிதின்கட்கரி அதில் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

மும்பை, புனே, நாக்பூர் நகரங்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மையங்களை அமைப்பதற்கு மகாராஷ்ட்ரா அரசு, மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

மும்பையில் அமையவுள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மையம் நில அளவை தொடர்பான தகவல்களை செயற்கைக்கோள் உதவியுடன் ஆய்வு செய்து நிலம் தொடர்பான தாவாக்களுக்கு தீர்வு அளிக்க பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில அளவை தொடர்பான தகவல்கள் அரசு முடிவெடுப்பதற்கு பேருதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாக்பூரில் அமையவுள்ள மையம் புலனாய்வுப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனேயில் அமையவுள்ள மையம் தடய அறிவியல் பரிசோதனைக்கான தகவல்களை புலனாய்வு அமைப்புகளுக்கு அளிக்கும் வகையில் செயல்படும் என்றும் மகாராஷ்ட்ரா அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் சுங்கச்சாவடி கட்டணங்களை நான்கு முதல், ஐந்து சதவீதம் வரை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் உயர்த்தியுள்ளது.

இது உடனடியாக நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி மீரட் அதிவிரைவுச்சாலையில் கார்களுக்கான கட்டணம் 165 ரூபாயிலிருந்து, 170 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

காசியாபாத்திலிருந்து மீரட் செல்லும் வாகனங்களுக்கு சுங்கச்சாவடி கட்டணம் 70 ரூபாயிலிருந்து, 75 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்களுக்கான மாதாந்திர பாஸ் கட்டணமும் தொள்ளாயிரத்து 30 ரூபாயிலிருந்து, தொள்ளாயிரத்து 50 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவிரைவுச்சாலைகள் செல்லும் வாகனங்களுக்கு இந்த உயர்த்தப்பட்ட கட்டண விகிதம் பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் மூன்று புதிய குற்றவியல் நடைமுறை சட்டங்களை அமல்படுத்துவதற்கான குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது.

மக்களவையில் இதனை தெரிவித்த உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய், தலைமைச்செயலாளர் தலைமையில் வழிகாட்டுதல் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஜம்மு காஷ்மீர் காவல்துறை தலைவர் தலைமையில் அமலாக்கத்திற்கு அதிகாரம் அளிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

புதிய குற்றவியல் சட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு காவலர் பயிற்சி கல்லூரியிலும், மாவட்ட அளவிலான பயிற்சி கல்லூரிகளிலும் காவல்துறையினருக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உருது, டோக்ரி மற்றும் காஷ்மீரி மொழிகளில் காவலர்களுக்கு இந்த பயிற்சி அளிக்கப்படுவதால், சட்டங்களை தெளிவாக அவர்கள் புரிந்துகொண்டு செயல்பட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரில் உள்ள 282 தாலுக்காக்களில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது மற்றும் நான்காவது வாரங்களில் குற்றவியல் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஜம்மு காஷ்மீர் அரசு ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜம்மு காஷ்மீரில் உள்ள தொள்ளாயிரத்து 75 அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளும் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல்துறையினரும், **'I-GOT '** கர்மயோகி இணையதளம் மூலமாக குற்றவியல் சட்டங்கள் தொடர்பான பயிற்சியை முடித்துள்ளதாகவும் திரு நித்யானந்த ராய் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் கட்டப்படும் மாணிக்கமாலைக்கு புவிசார் குறியீடு அறிவிக்கப்பட்டுள்ளதன் மூலம் இதன் விற்பனையும், தயாரிப்பும் மேலும் அதிகரிக்கும் என அம்மாவட்ட மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் தமிழகத்திற்கு பெருமை கிடைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*<u>(சவுண்ட் பைட் - குமார் - 30 செகண்ட்ஸ்)</u>*

<<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர். 26 பேர் காயமடைந்தனர்.

**'Shahaur Buldhana '** தேசிய நெடுஞ்சாலையில் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று அதிவேகமாக இரண்டு பேருந்துகள் மீது அடுத்தடுத்து மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

காஸா பகுதியை தங்களது கட்டுப்பாட்டில் முழுமையாக கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Katz** தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸாவில் உள்ள தீவிரவாதிகள் மற்றும் தீவிரவாத கட்டமைப்புகளை முழுமையாக அழிக்கும் நோக்கிலேயே இஸ்ரேல் இதனை செயல்படுத்த உள்ளதாக கூறியுள்ளார்.

கைப்பற்றப்படும் ஒவ்வொரு பகுதியும் இஸ்ரேல் பாதுகாப்பு மண்டலத்துக்குள் படிப்படியாக கொண்டுவரப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

காஸா பகுதியில் உள்ள பாலஸ்தீனியர்கள் முழுமையாக வெளியேறினால்தான் இதனை விரைந்து செயல்படுத்த முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

அங்குள்ள பாலஸ்தீனியர்கள் ஹமாஸ் அமைப்பினருக்கு ஒத்துழைப்புத்தரக்கூடாது என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

காஸா பகுதி முழுமையாக இஸ்ரேல் கட்டுப்பாட்டுக்குள் வந்தால்தான், போரை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் திரு **Katz** தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

வெளிநாட்டு பொருட்களுக்கான புதிய வரி விகிதங்கள் இன்று அறிவிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் மாளிகை செய்தித்தொடர்பாளர் **Karoline Leavit,** அமெரிக்கப் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகள் விதிக்கும் வரியை ஈடுசெய்யும் வகையில் இந்த புதிய வரி விகிதங்கள் அமையும் என்று தெரிவித்தார்.

தானியங்கி மற்றும் உதிரி பாகங்களுக்கு அமெரிக்கா 25 சதவீத வரியை விதிப்பதாக அவர் கூறினார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு – குஜராத் அணிகள் மோதுகின்றன.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

----------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியின் முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் பெங்களூரு இன்று கோவா அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>>